**MAY 2023** **P/ID 35316/PTL2F**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடையளிக்க

1. உ.வே.சா. திருவிளையாடற்புராணத்தைக் கற்ற நிலை குறித்து எழுதுக.

2. உ.வே.சா. செய்யுள் இயற்றத் துணைநின்றவர் குறித்து எழுதுக.

3. கொழுநனுக்குச் சோறூட்டும் இல்லறமுறை குறித்து திரு.வி.க. கூறுவது யாது?

4. பெருந்திண்டி தற்கொலைக்குச் சமம் – எனத் திரு.வி.க. குறிப்பிடுவது ஏன்?

5. பஞ்சாப் மாநிலத்தில் பெருந்தலைவர்களை எவ்வாறெல்லாம் கொடுமைபடுத்தினர்?

6. 'சேரமான் பெருமாள்' என்னும் பெயர்க்காரணத்தை எழுதுக.

7. 'கதவு' சிறுகதையில் தலையாரி கடன் செலுத்தாமைக்காக செய்த செயலினை எழுதுக.

8. 'காற்று' சிறுகதையில் கற்பகம் கடற்கரைக்குச் செல்ல எண்ணியது குறித்து எழுதுக.

9. ‘ராஜதரங்கிணி’ சிறுகதையில் தரங்கிணி செய்த வீரச்செயலினை எழுதுக.

10. ‘அரிசி’ சிறுகதையில் மூக்கன் எத்தொழிலைக் கைவிட்டான்?

11. ‘யுகசந்தி’ சிறுகதையில் கௌரிபாட்டி எத்தகைய மாற்றம் வேண்டுமென அறிவுறுத்துகிறாள்?

12. ‘கரையும்’ உருவங்கள் சிறுகதையில் அக்கா, தம்பியைத் தேற்றுவித்த திறத்தினை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடையளிக்க.

13. சுப்பிரமணிய தேசிகரின் ஆசி குறித்து உ.வே.சா கூறுவனவற்றை எழுதுக.

14. உ.வே.சா அவர்களின் புறநானூற்றுப் பதிப்புக் குறித்து விளக்குக.

15. ‘பிறர்க்கு உழைப்பதே வாழ்வின் நோக்கம்’ என்னும் கீதை வரிகளின்வழி திரு.வி.க கூறுவனவற்றை எழுதுக.

16. ‘சமயவாழ்வுக்குச் சத்தியாகிரகம் துணை செய்யும்’ என்னும் திரு.வி.க அவர்களின் கூற்றினை விரித்துரைக்க.

17. சேரமான் காதலியில் பாஸ்கர ரவிவர்மனின் சிரிப்புக் குறித்து விரித்துரைக்க.

18. ‘நரிக்குறத்தி’ சிறுகதையில் வண்டிகோடியின் பாத்திரப்படைப்புத் திறத்தை விளக்குக.

19. ‘ரீதி’ சிறுகதையில் ஆடு மேய்க்கின்ற சிறுவர்களின் வாழ்க்கை எங்ஙனம் படம்பிடித்துக் காட்டப்படுகிறது?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடையளிக்க.

20. உ.வே.சா. அவர்களின் சிந்தாமணி ஆராய்ச்சி மற்றும் பதிப்புப் பணிகள் குறித்து விரித்துரைக்க.

21. ‘இந்திய வாழ்வு – அன்பு வளர்ச்சிக்குரியது’ – இக் கூற்றை திரு.வி.க. வழிநின்று ஆய்க.

22. ‘சேரமான் காதலி’ யில் பத்மாவதியின் பாத்திரப்–படைப்பின் அருமையினைத் தொகுத்து எழுதுக.

23. இந்திரா பார்த்தசாரதியின் 'நாசக்காரக் கும்பல்' மக்களைப் படம்பிடித்துக் காட்டும் திறம் குறித்து விரித்து எழுதுக.

24. வண்ணநிலவனின் ‘கரையும் உருவங்கள்' சிறுகதையில் சங்கரன் பாத்திரப்படைப்பை ஆய்க.

———————